டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 15.03.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 22 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 220 - Madurai | Online Edition

# தமிழ்நாடு பருப்பு உற்பத்தியில் தன்னிறைவு பெற ரூ.582.24 லட்சம் நிதி ஒதுக்கீடு

புது தில்லி, மார்ச் 14

பருப்பு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்கான இயக்கத்தின் கீழ் விதை உற்பத்தி மற்றும் விநியோகம், தரிசு நில மேம்பாடு, அறுவடைக்கு பிந்தைய நடவடிக்கைகளுக்கான உள்கட்டமைப்பு மற்றும் ஆராய்ச்சி போன்றவற்றுக்காக 2025-26-ம் நிதியாண்டில் தமிழ்நாட்டிற்கு 582.24 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் துறை இணையமைச்சர் பாகீரதி சௌத்ரி தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்துள்ள அவர், விவசாயிகளின் வருவாய் நீடித்த வேளாண் நடைமுறைகளை ஊக்குவித்தல் மற்றும் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கும் வகையில், பயிர் பன்முகத்தன்மை நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாகத் தெரிவித்தார். பருப்பு வகைகளின் சாகுபடிக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் மத்திய அரசின் பங்களிப்புடன் கூடிய பருப்பு வகைகளுக்கான தற்சார்பு இயக்கம் கடந்த 2025-ம் ஆண்டு அக்டோபர் முதல் தேதி தொடங்கப்பட்டதாகவும் இத்திட்டத்திற்காக 6 ஆண்டுகளுக்கு 11,440 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

துவரை, உளுந்து, மசூர் போன்ற பருப்பு வகைகளின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் தமிழ்நாடு உட்பட 28 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

எண்ணெய் வித்துக்களின் சாகுபடியை மேம்படுத்தும் வகையில், எண்ணெய் வித்துக்களுக்கான தேசிய இயக்கம் தொடங்கப்பட்டு தமிழ்நாடு உள்பட நாடு முழுவதும் செயல் படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். இத்திட்டம் உள்நாட்டு எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை மேம்படுத்து வதற்கும் சமையல் எண்ணெய் உற்பத்தியில் தற்சார்பு நிலையை எட்டுவதற்கும். இறக்குமதி சார்ந்திருக்கும் நிலையைக் குறைப்பதற்கும் உதவிடும் என்று மத்திய வேளாண் துறை இணையமைச்சர் பாகீரதி சௌத்ரி தெரிவித்தார்.

# TNAU pulse wonder

## நன்மைகள் பற்றி எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவர்கள்




திருச்சி, மார்ச் 14

திருச்சிராப்பள்ளி, சமயபுரத்தில் உள்ள தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தில் வேளாண் அறிவியல் பயிலும் இறுதி ஆண்டு மாணவர்கள் (B3 திருவெறும்பூர்). தங்கள் ஊரக வேளாண்மைப் பணி அனுபவத்தில், துவாக்குடியில் விவசாயிகளிடம் TNAU pulse wonder நன்மைகள் பற்றி எடுத்துரைத்தனர்.

TNAU Pulse Wonder என்பது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட ஒரு பயிர் ஊக்கி (crop booster) ஆகும்.

இது பயறு வகைப் பயிர்களில் (உளுந்து, பாசிப் பயறு) பூ உதிர்வதைக் குறைத்து, பூக்கள் மற்றும் காய்களின் எண்ணிக்கையை அதிகரித்து, விளைச்சலை 10-20% வரை அதிகரிக்க உதவுகிறது. ஏக்கருக்கு 2 கிலோ அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# அருப்புக்கோட்டை பள்ளியில் சிறப்பு விவசாய அறிவியல் கண்காட்சி!



விருதுநகர், மார்ச் 14

விருதுநகர் மாவட்டம், அருப்புக் கோட்டையில் இயங்கி வரும் கிரீன் விஸ்டம் மெட்ரிக்குலேசன் பள்ளியில் 14.03.26 அன்று சமூக நல்லிணக்க விழாவாக இரமலான் பண்டிகை மற்றும் அறிவியல் கண்காட்சி நடைபெற்றது. மாணவ, மாணவிகள் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாட நிகழ்ச்சி துவங்கியது. பள்ளியின் முதல்வர் ஆனந்தி வரவேற்புரை வழங்கினார். விஸ்டம் எஜுகேசனல் சொசைட்டி தலைவர் ஆயை மு.காஜாமைதீன் தலைமை வகித்தார். செயலாளர் சம்சுதீன், உறுப்பினர்கள் அகமது யாசிர், அம்சா கனி சிக்கந்தர், நசீரா மற்றும் அகமது ஹபீரா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



கோ.சுரேஷ் குமார் (மைக்ரோகிரின் செயல்பாட்டாளர்) முன்னாள் வேளாண் அறிவியல் தொழிற்கல்வி ஆசிரியர் மற்றும் கோவில்பட்டி இசை FM இயக்குநர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு அறிவியல் கண்காட்சியைத் திறந்து வைத்து சமூக நல்லிணக்க உரை நிகழ்த்தினார்.

மீரா மருத்துவமனை சார்பில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் மற்றும் பங்கு பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் எம்.என்.எர்சாத்கான் சார்பில் பரிசுகள் மற்றும் பிரியாணி வழங்கப்பட்டது.

ஆசிரியர் வீரசுதா நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். ஆசிரியர் யாஸ்மித் ராணி நன்றியுரை வழங்கினார். நாட்டுப்பண்ணுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# டிஜிட்டல் வேளாண் இயக்கத்தைச் செயல்படுத்துதல் - ஒரு பார்வை

புது தில்லி, மார்ச் 14

11.03.26 நிலவரப்படி, தமிழ்நாட்டில் மொத்தம் 34,73,658 உழவர் அடையாள அட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் துறை இணையமைச்சர் பகீரத் சௌத்ரி கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் உறுப்பினர் தர்மர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த அவர், மேலும் கூறியிருப்பதாவது : டிஜிட்டல் வேளாண் இயக்கத்திற்கு 2024 செப்டம்பரில் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான ஒதுக்கீடு ரூ 2817 கோடியாகும். டிஜிட்டல் வேளாண் இயக்கம் விவசாயத்திற்கான டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பை உருவாக்க திட்டமிட்டுள்ளது, அதாவது அக்ரிஸ்டாக், விவசாயிகள் ஆதரவு அமைப்பு, விரிவான மண் வளம் மற்றும் சுயவிவர வரைபடம் போன்றவற்றுடன் மத்திய/மாநில அரசால் மேற்கொள்ளப்பட்ட பிற தகவல் தொழில்நுட்ப முன்முயற்சிகளும் இதில் அடங்கும். விவசாயிகள், பயிர்கள், கால்நடைகள் மற்றும் மீன்வளம் மற்றும் விவசாய மைய டிஜிட்டல் தீர்வுகள் பற்றிய தகவல்களுக்கான ஒரே ஆதாரமாக நாட்டில் வலுவான டிஜிட்டல் விவசாய சுற்றுச்சூழல் அமைப்பை செயல்படுத்துகிறது.

டிஜிட்டல் வேளாண் இயக்கத்தின் கீழ் மாநில விவசாயிகள் பதிவேட்டில் பெண் விவசாயிகள், கால்நடைகள் மற்றும் மீன் வளம் உட்பட அனைத்து நில உரிமையாளர்களும் பதிவு செய்து உள்ளனர். அவர்களுக்கு உழவர் ஐடி என்ற டிஜிட்டல் அடையாளத்தை வழங்குகிறது. குத்தகைதாரர்கள் குறித்த அந்தந்த மாநிலக் கொள்கையின்படி அத்தகைய விவசாயி களை விவசாயிகளின் பதிவேட்டில் சேர்க்க ஒரு மாநிலம் முடிவு செய்யலாம்.

கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை விவசாயிகளும் இந்தப் பதிவேட்டில் சேர்க்கப்பட்டுள்ளனர். 09.03.26 நிலவரப் படி, 9.12 கோடிக்கும் அதிகமான விவசாய அடையாள அட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

மேலும், டிஜிட்டல் பயிர் கணக்கெடுப்பு பயிர்களின் நில அளவிலான தெரிவுநிலையையும், பருவங்களில் விதைக்கப் படும் பகுதிகளின் சிறந்த மதிப்பீட்டையும் செயல்படுத்தியுள்ளது.

2025 காரீப் பருவத்தில், 604 மாவட்டங்களில் 28.5 கோடிக்கும் அதிகமான நிலங்களை உள்ளடக்கிய டிஜிட்டல் பயிர் கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது.

டிசம்பர் 2026 வரை, 39.10 மில்லியன் ஹெக்டேர் மண் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் இணைய அணுகல் அதிகரித்திருந்தாலும், மொபைல் போன்கள் இல்லாத விவசாயிகளின் டிஜிட்டல் உள்ளடக்கத்தை உறுதி செய்ய கூடுதல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அக்ரி ஸ்டாக்கின் பலன்களை எந்த விவசாயியும் பெறாமல் இருக்க மாநிலங்கள் முகாம்களை ஏற்பாடு செய்கின்றன. மேலும், உள்ளூர் இளைஞர்கள், வேளாண் விரிவாக்க தொழிலாளர்கள், விவசாயிகளுக்கு டிஜிட்டல் கருவிகளைப் பயன்படுத்த உதவும் விவசாய தோழர்கள் மற்றும் விவசாயம் தொடர்பான பிற இணையதளங்களை தமிழ்நாடு உட்பட கிராம மட்டங்களில் உள்ளூர் மொழிகளில் பயிற்சி அளிப்பது ஆகியவை திட்டங்களில் அடங்கும்.




# திருநெல்வேலியில் மெகா உணவுப்பூங்கா மத்திய அமைச்சர் ரவ்னீத் சிங் தகவல்

புது தில்லி, மார்ச் 14

நாடு முழுவதும் 41 மிகப் பெரிய உணவுப் பூங்காக்கள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் 25 உணவுப் பூங்காக்கள் செயல்பாட்டில் உள்ளதாக மத்திய உணவு பதப்படுத்துதல் துறை இணையமைச்சர் ரவ்னீத் சிங் தெரிவித்துள்ளார். மக்களவையில் நேற்று கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த அவர், தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் உணவுப் பூங்கா அமைப்பதற்கான அனுமதி கடந்த 2021-ம் ஆண்டு ஜனவரி 23-ம் தேதி அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடான 77 கோடி ரூபாயில் 23.64 கோடி ரூபாய் மத்திய அரசின் மானியமாக வழங்கப்படும் என்றும் அதில் 13.27 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இத்திட்டத்தின் கீழ் பூங்கா அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

இத்திட்டத்தின் வழிகாட்டுதல் நெறிமுறைகளின் கீழ், தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்தில், அமலாக்க முகமை நிலங்களைக் குத்தகைக்கு எடுப்பதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் காரணமாக உணவுப் பதப்படுத்துதல் அலகுகள் மற்றும் மிகப் பெரிய உணவுப் பூங்காக்களை அமைத்து செயல்பாட்டுக்குக் கொண்டு வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

இத்திட்டத்தின் அமலாக்கம் குறித்து அமைச்சகம் தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் குறித்த கால இடைவெளியில் மூத்த அதிகாரிகளுடனான ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு பணிகளை விரைவில் முடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மத்திய இணையமைச்சர் ரவ்னீத் சிங் கூறினார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

# Silviculture பற்றி விவசாயிகளிடம் கலந்துரையாடிய வேளாண் கல்லூரி மாணவிகள்

திருச்சி, மார்ச் 14

திருச்சிராப்பள்ளி சமயபுரம் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக் கழகத்தின் வேளாண்மை கல்லூரியை சேர்ந்த இறுதியாண்டு




மாணவிகள் கிராமிய வேளாண்மை பயிற்சி (Rawe) திட்டத்தின் கீழ் புள்ளம்பாடி வட்டத்திற்கு உட்பட்ட புஞ்சை சங்கேந்தி கிராமத்தில் Silviculture பற்றி அங்கே இருக்கும் விவசாயிகளுக்கு தெரிவித்தனர்.



காடு வளர்ப்பு அல்லது மரம் வளர்ப்பு கலை என தமிழில் அழைக்கப்படுகிறது. இது மரப்பயிர்களின் வளர்ச்சி, பராமரிப்பு இனப்பெருக்கம் பற்றி தரமான வன மேலாண்மைக்கான அறிவியல் பூர்வமான நுட்பங்களை உள்ளடக்கியது.

**முக்கிய நோக்கங்கள்**

**✓மறு உருவாக்கம் (Regeneration)**

காடுகள் இல்லாத இடங்களில் புதிய மரங்களை நடுதல் அல்லது பழைய காடுகளில் இயற்கையான முறையில் மீண்டும் மரங்கள் வளர்ப்பதை உறுதி செய்தல்.

**✓தரமான உற்பத்தி**

தரமான மரக்கட்டைகள் மற்றும் பிறவன பொருட்களை பெறுவதற்கு மரங்களின் அடர்த்தியையும் தரத்தையும் கட்டுப்படுத்துதல்.

**✓சுற்றுச்சூழல் பாதுகாப்பு**

- வனவிலங்கு பாதுகாப்பு
- நீர் மேலாண்மை
- மண்ணரிப்பை தடுத்தல்

**✓பராமரிப்பு (Stand Tending)**

- மரங்கள் நன்கு வளர தேவையற்ற கிளைகளை அகற்றுதல் (pruning)
- Thinning

**✓தொழில் நுட்பங்கள்**

நடவு முறை, கவர்த்து செய்தல் மற்றும் மரப்பயிர் மேலாண்மை.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட கிரியா விவசாயிகள் silviculture பற்றி தங்களிடம் சந்தேகங்களை கேட்டு தெளிவு பெற்றனர்.

# கானமயில் இனப்பெருக்கத் திட்டம் 4-வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது

புது தில்லி, மார்ச் 14

மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத்துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் வெள்ளிக்கிழமை, ராஜஸ்தானின் பாதுகாக்கப்பட்ட இனப்பெருக்க மையத்தில் இந்த வாரம் இரண்டு புதிய குஞ்சுகள் பொரிக்கப்பட்டதை அடுத்து, கானமயில் இனப் பெருக்கத் திட்டத்தின் நான்காவது ஆண்டில் நுழைந்துள்ளது என்று தெரிவித்தார், இதனால் இந்தப் பறவைகளின் எண்ணிக்கை 70-ஆக உயர்ந்துள்ளது.

பிரதமர் நரேந்திர மோடியின் சுற்றுச்சூழல் உணர்திறன் தலைமையின் கீழ், நாடு இத் திட்டத்தை ஒரு பெரிய வெற்றியாக மாற்றும் பாதையில் உள்ளது என அமைச்சர் மேலும் கூறினார்.

இந்த வளர்ச்சியை சமூக ஊடக எக்ஸ் தளப்பதிவில் திரு யாதவ் பகிர்ந்துள்ளார். இது இத்திட்டத்தின் கீழ் அடையப்பட்ட மற்றொரு மைல்கல் என்று கூறியுள்ளார். இந்த வாரம் ராஜஸ்தானில் உள்ள பாதுகாக்கப்பட்ட இனப்பெருக்க மையத்தில் இரண்டு கானமயில் குஞ்சுகள் பொரிக்கப்பட்டதை தெரிவித்துள்ள அமைச்சர், ஒன்று இயற்கை இனச்சேர்க்கை மூலமும் மற்றொன்று செயற்கை கருவூட்டல் மூலமும் நடந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

முக்கியமான பறவை இனங்களின் பாதுகாப்பு முயற்சிகளுக்கு இது ஒரு முக்கியமான மைல்கல் என்று கூறியுள்ள யாதவ், இந்த ஆண்டு வளர்க்கப்பட்ட குஞ்சுகளில் சில காட்டுக்குள் விடப்படும், இந்த சாதனைக்காக ராஜஸ்தான் வனத்துறையின் வன அதிகாரிகளையும் அவர் பாராட்டியுள்ளார்.



# நூலகத்தை பார்வையிட்டு அதன் செயல்பாடுகளை அறிந்த வேளாண்மை கல்லூரி மாணவர்கள்




திருச்சி, மார்ச் 14

ஊரக வேளாண்மை பணி திட்டத்தின் ஒரு பகுதியாக, திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தின் இறுதி ஆண்டு (வேளாண்மை) மாணவர்கள் மணச்சநல்லூரில் உள்ள நூலகத்திற்கு கல்வி பயணம் மேற்கொண்டனர். இந்த நூலகம் மாணவர்கள் மற்றும் கிராமப்புற இளைஞர்களிடையே வாசிப்பு பழக்கத்தையும் கல்வி முன்னேற்றத்தையும் ஊக்குவிக்கும் வகையில் செயல்பட்டு வருகிறது.

விஜயத்தின் போது மாணவர்கள் அங்கு உள்ள பல்வேறு நூல்கள், போட்டித் தேர்வு பயிற்சி புத்தகங்கள், நாளிதழ்கள் மற்றும் குறிப்பு நூல்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டனர்.

நூலகத்தின் பொறுப்பாளர்கள், போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்களுக்கு அமைதியான படிப்பு சூழலும் தேவையான கல்வி வளங்களும் வழங்கப்படுகின்றன என்பதை விளக்கினர். கிராமப்புறங்களில் இத்தகைய நூலகங்கள் கல்வி வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிப்பதையும் எடுத்துரைத்தனர்.

இந்த விஜயம் மாணவர்களுக்கு சமூக அடிப்படையிலான கல்வி ஆதரவு அமைப்புகளின் முக்கியத்துவத்தை அறிய உதவியாக இருந்தது. மாணவர்கள் இந்த முயற்சியை பாராட்டினர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# பயிர்களின் வளர்ச்சிக்கு உதவும் ஜிவாமிர்த கரைசல் தயாரிப்பது எப்படி?



இன்றைய காலகட்டத்தில் மண்வளம் இல்லாத நிலையில் பயிர்கள் முளைத்து வளர்ந்தால் கூட சரியான மகசூல் கிடைப்பதில்லை. கண்ட கண்ட பயிர் ஊக்கிகளை உரக் கடைகளில் வாங்கி தெளித்தாலும் கூட எதிர்பார்த்த விளைச்சல் இல்லாத நிலைதான் சாகுபடிக்கான செலவுதான் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற நிலையில் இயற்கையிலே கிடைக்கின்ற இடுபொருட்களை வைத்து மிகவும் எளிதாகவும் குறைந்த செலவில் எளிதாக ஜிவாமிர்த கரைசலை தயாரிக்கலாம் என்பதை பற்றி விரிவாக பார்ப்போம்.

**தேவையான பொருட்கள்?**

நாட்டு பசு மாட்டு சாணம் = 10 கிலோ
நாட்டு பசு மாட்டு சிறுநீர் = 10 லிட்டர்
வெல்லம் = 1 கிலோ
பயறு மாவு = 1 கிலோ
சாகுபடி செய்யப்பட்ட நிலத்தின் மண் = ஒரு கைப்பிடி அளவு
பிளாஸ்டிக் டிராம் (பேரல்) = 1 எண்
தண்ணீர் = 200 லிட்டர்

**செய்முறை**

அனைத்து இடுபொருட்களையும் ஒரு பேரலில் இட்டு ஒரு நாள் இருக்குமாறு இருக்க வேண்டும். பின்பு பயன் படுத்தலாம். இதனை ஒரு வார காலத்திற்குள் பயன்படுத்திட

வேண்டும். அப்போது தான் முழுமையான பயன் கிடைக்கும். இந்த கரைசலை காலை, மாலை இரு நேரங்களில் குச்சியால் (மூங்கில் கழி) வலது புறமாக (ANTI CLOCK WISE) கலக்கி விட வேண்டும். பயிருக்கு ஊட்டம் கொடுப்பதற்காக பாசன நீருடன் கலந்து விடலாம். இலைவழியாக தெளிப்பாக (FOLIAR SPRAY) செய்யலாம்.

**எவ்வாறு இடுவது?**

இளம் பயிராக இருந்தால் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 50 மி.லி என்ற அளவில் ஜிவாமிர்ததை கலந்து தெளிக்க வேண்டும்.

**ஜிவாமிர்த கரைசல் தயாரிக்கும் போது கவனிக்க வேண்டியவை**

1) சாணம் புதிதாக (FRESH) இருக்க வேண்டும். பழைய சாணத்தை பயன்படுத்தக்கூடாது.

2) மாட்டு சிறுநீர் புதியதை விட பழைய நாள்பட்ட சிறுநீரை பயன்படுத்தலாம்.

3) குச்சியால் கிளறி விட வேண்டும்.

**ஜிவாமிர்தம் கரைசல் இடுவதால் என்ன பயன்கள்**

1) பயிர்கள் செழித்து வளர இதனை பயன்படுத்தலாம்.

இதில் ஜிப்ராலிக் அசிட்டிக் அமிலம் (CAA) மற்றும் நாப்தலின் அசிட்டிக் அமிலம் (NAA) போன்றவைகளுக்கு இணையான பயிர் ஊக்கியாக செயல்படும்.

2) ஒளிச்சேர்க்கை சிறப்பாக நடைபெற்று மகசூல் அதிகரிக்கும்.

3) இந்த இரண்டு அமிலங்களை தனியார் நிறுனங்கள் (ARTIFICIAL) தயாரித்து அதிக விலைக்கு (GROWTH HORMONS) யாக விற்பனை செய்யப்படுகிறது.

4) மாலை நேரங்களில் அதாவது 4 மணிக்கு மேல் தெளித்தால் நல்ல பலன் தரும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் பால் பொருட்களின் உற்பத்தி மற்றும் பாதுகாப்புக்கான நடவடிக்கைகள்

புது தில்லி, மார்ச் 14

தமிழ்நாட்டில் கடந்த 5 ஆண்டுகளில் சுமார் 5.25 லட்சம் டன் பால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக மத்திய பால்வளத்துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்துள்ள அவர், தமிழ்நாட்டில் மாதாந்தர பால் பயன்பாடு கிராமப்புறங்களில் நபர் ஒன்றுக்கு 9 லிட்டராகவும் நகர்ப்புறங்களில் நபர் ஒன்றுக்கு 10 லிட்டராகவும் மதிப்பிடப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலை ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி 2026 பிப்ரவரி 28-ம் தேதி வரை நாடு முழுவதிலும் மொத்தம் 1,17,928 பால் மற்றும் அது சார்ந்த உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மேலும் பால் மற்றும் அது சார்ந்த பொருட்களின் தரநிலை குறித்த பகுப்பாய்வு முறைகளை இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலை ஆணையம் பரிந்துரை செய்துள்ளது என்றும், இது தொடர்பான முழு விவரங்கள் தனியாக வெளியிடப்பட்டு உள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

பால் மற்றும் பால் பொருட்களை சோதனை செய்வதற்கு ஏதுவாக சோதனை மற்றும் பகுப்பாய்வு ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியம் நாடு முழுவதும் 252 ஆய்வகங் களுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் நடமாடும் உணவுப் பாதுகாப்பு பரிசோதனை ஆய்வகங்களுக்கான நிதி உதவி வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இதன் மூலம் பால் உள்ளிட்ட பால் பொருட்களில் கலப் படங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.


ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம்
கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு
செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396

# கால்நடை மருத்துவமனை முகாமில் கலந்து கொண்ட வேளாண் கல்லூரி மாணவர்கள்

திருச்சி, மார்ச் 14




திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக் கழகத்தை சேர்ந்த வேளாண்மைக் கல்லூரியில் பயிலும் இறுதி ஆண்டு மாணவர்கள் கிராமப்புற விவசாய பணி அனுபவத் திட்டத்தினை (RAWE) ஸ்ரீரங்கம் வட்டம், அந்தநல்லூர் பகுதியில் தங்கி மேற்கொண்டுள்ளனர்.

இதன் ஒரு அங்கமாக திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், ஜீயபுரத்தில் உள்ள கால்நடை மருத்துவமனையில் முகாம் மேற்கொண்டனர்.

தமிழகத்தின் கிராமப்புறங்களில் கால்நடை வளர்ப்பு முக்கியமான வருமான மூலமாக உள்ளது. பசு, எருமை, ஆடு, செம்மறியாடு, கோழி போன்ற கால்நடைகள் மூலம் விவசாயிகள் தினசரி வருமானம் பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், கால்நடைகளுக்கு உடனடி மருத்துவ சேவை கிடைப்பது மிகவும் அவசியமாகிறது. பாதிக்கப்பட்ட விலங்குகளின் நோய்கள் மற்றும் சிகிச்சைகள் குறித்து அவர்கள் அதிக அறிவைப் பெற்றனர். பல்வேறு வகையான பசுக்களுக்கு செலுத்தப்படும் பல்வேறு வகையான Semen ஊசிகள் மற்றும் அதை பசுவிற்கு செலுத்தும் செயல்முறை பற்றி மாணவர்கள் அறிந்து கொள்கிறார்கள்.

விவசாயம் தவிர கால்நடைகள் பற்றி அறிய மாணவர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. கால்நடைகள் வளர்ப்பாளர்களுடன் கலந்துரையாடி, ஆடு, மாடு மற்றும் பிற விலங்குகளை வளர்ப்பது குறித்தும் அறிந்து கொண்டனர்.

# உயிரியல் கட்டுப்பாட்டின் வகைகள் : பெருக்குதல், பாதுகாப்பு மற்றும் பாரம்பரியம்

## உயிரியல் கட்டுப்பாடு என்றால் என்ன?

உயிரியல் கட்டுப்பாடு, உயிரியல் கட்டுப்பாடு அல்லது உயிரியல் பாதுகாப்பு என்றும் அழைக்கப்படுகிறது, இது பிற உயிரினங்கள், இயற்கை எதிரிகள், நோய்க் கிருமிகள், அரை வேதிப்பொருட்கள் மற்றும் இயற்கை பொருட்களைப் பயன்படுத்தி பூச்சிக் கட்டுப்பாட்டு முறையாகும்.

விவசாயத்தில் வேறு சில கட்டுப்பாட்டு முறைகளைப் போலல்லாமல், உயிரியல் பாதுகாப்பு பெரும்பாலும் மிகக் குறைந்த அல்லது எந்த பக்கவிளைவுகளையும் ஏற்படுத்தாது.

பல தசாப்தங்களாக, விவசாயிகள் ரசாயன பூச்சிக்கொல்லிகளை நம்பியுள்ளனர். இருப்பினும், இவற்றுடன் தொடர்புடைய பிரச்சினைகள் அதிகரித்துள்ளன. மனித ஆரோக்கியத்தில் ஏற்படும் தாக்கம், வளர்ந்து வரும் பூச்சி எதிர்ப்பு மற்றும் சுற்றுச்சூழல் சேதம் ஆகியவை இதில் அடங்கும். இதன் விளைவாக, உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளைப் பயன்படுத்துவதன் நன்மைகள் மிகவும் தெளிவாகி விட்டன.

## உயிரியல் கட்டுப்பாட்டின் வகைகள்

உயிரியல் கட்டுப்பாட்டில் மூன்று முக்கிய வகைகள் உள்ளன. அவை பெருக்குதல், பாதுகாப்பு மற்றும் பாரம்பரிய உயிரியல் கட்டுப்பாடு, பெருக்க உயிரியல் கட்டுப்பாட்டில், பூச்சிகள் மற்றும் நோய்களை எதிர்த்துப் போராட, விவசாயிகள் ஒரு பகுதியில் இயற்கை எதிரிகள் மற்றும் நோய்க்கிருமிகளை சரியான நேரத்தில் அதிகரிக்கின்றனர். இயற்கை எதிரிகள் மற்றும் நோய்க் கிருமிகள், எடுத்துக்காட்டாக, வேட்டையாடுபவர்கள், ஒட்டுண்ணிகள் அல்லது நுண்ணுயிரிகள். உயிரியல் பூச்சிக் கொல்லிகளை பெருக்க உயிரியல் கட்டுப்பாட்டில் பயன்படுத்தலாம். பாதுகாப்பு உயிரியல் கட்டுப்பாட்டில், விவசாய நடைமுறைகள் சுற்றுச்சூழலில் ஏற்கனவே உள்ள இயற்கை எதிரிகளின் மிகுதியை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. உதாரணமாக, சுற்றுச்சூழல் நிலைமைகளை மேம்படுத்துவது இயற்கை எதிரிகள் மற்றும் நோய்க்கிருமிகள் செழித்து வளர உதவுகிறது.

சில நேரங்களில் இறக்குமதி உயிரியல் கட்டுப்பாடு என்று அழைக்கப்படும் பாரம்பரிய உயிரியல் கட்டுப்பாடு, பூச்சியின் இயற்கை எதிரியையும், எப்போதாவது ஒரு நோய்க்கிருமியையும் அறிமுகப்படுத்துவதை உள்ளடக்கியது. இது பெரும்பாலும் நீண்டகால தீர்வாகும்.

பயன்படுத்தப்படும் உயிரியல் கட்டுப்பாட்டு வகையைப் பொறுத்து இந்த உத்திகள் வெவ்வேறு நபர்களையோ அல்லது நிறுவனங்களையோ உள்ளடக்கியிருக்கலாம்; எடுத்துக்காட்டாக, விவசாயிகள், விஞ்ஞானிகள் மற்றும் அரசாங்கங்கள். கீழே கூடுதல் விவரங்களைக் காணலாம்.

**உயிரியல் ரீதியாக அதிகரிக்கும் கட்டுப்பாடு**

உயிரியல் கட்டுப்பாடு என்பது இயற்கை எதிரிகள் அல்லது நோய்க் கிருமிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் பயிர்களின் பூச்சிகள் மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்து வதாகும்.

எடுத்துக்காட்டாக, பாக்டீரியா அல்லது வேட்டையாடு பவர்களை வெளியிடுவதன் மூலம். உயிரியல் பூச்சிக்கொல்லி மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு பொருட்கள் அல்லது உயிரியல் கட்டுப்பாட்டு முகவர்களின் பயன்பாடு, உயிரியல் கட்டுப்பாட்டு பெருக்கத்தின் ஒரு பகுதியாகும்.

பெரும்பாலும், இயற்கை எதிரிகள் அல்லது நோய்க்கிருமிகள் ஏற்கனவே சுற்றுச்சூழலில் இருக்கும். இருப்பினும், அவற்றின் எண்ணிக்கை பூச்சியைக் கட்டுப்படுத்த போதுமானதாக இருக்காது. பெருக்க உயிரியல் கட்டுப்பாடு பொதுவாக உடனடி விளைவைக் கொண்டிருக்கும்,


ஆனால் நீண்ட காலம் நீடிக்காது. அதனால் தான் இதற்கு ஒரு கட்டுப்பாட்டு முகவரை மீண்டும் மீண்டும் வெளியிட வேண்டியிருக்கும்.



## பாதுகாப்புஉயிரியல் கட்டுப்பாடு

பாதுகாப்புஉயிரியல் கட்டுப்பாடு என்பது ஏற்கனவே இருக்கும் இயற்கை எதிரிகளின் எண்ணிக்கை அல்லது செயல்பாட்டைப் பாதுகாத்து மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது முக்கியமாக சுற்றுச்சூழலை நிர்வகிப்பதில் கவனம் செலுத்துகிறது. இயற்கை எதிரிகளுக்கு வழங்க சில கலாச்சார மற்றும் இயந்திர நடைமுறைகளைப் பின் பற்றுவதன் மூலம் விவசாயிகள் இந்த அணுகுமுறையைப் பயன்படுத்தலாம் :

- உணவு ஆதாரங்கள்
- மாற்று ஹோஸ்ட்கள்
- தங்குமிடம் மற்றும் புகலிட வாழ்விடம்
- பொருத்தமான மைக்ரோக்ளை மேட்டுகள்




**புகைப்பட உரிமை : CABI**

இந்த வகையான உயிரியல் கட்டுப்பாடு, இயற்கை எதிரி களுடன் தலையிடும் காரணிகளைக் குறைப்பதையோ அல்லது பூச்சிக்கொல்லிகளின் எதிர்மறை விளைவுகளைத் தவிர்ப்பது போன்ற அவற்றின் செயல்திறனைக் கட்டுப்படுத்துவதையோ நோக்கமாகக் கொண்டுள்ளது.

பூச்சி வலையமைப்புகளை நிறுவுவது ஒரு உதாரணம். ஒற்றைப் பயிர் முறையில் அவற்றைக் கண்டுபிடிக்க முடியாத இயற்கை எதிரிகள், ஒட்டுண்ணிகள் மற்றும் வேட்டையாடுபவர் களுக்கு ஆண்டு முழுவதும் மகரந்தம் மற்றும் தேன் போன்ற வளங்களை வழங்க, பயிர்களுக்கு அருகில் உள்ளூர் தாவரங் களின் கீற்றுகளை நடுவது இதில் அடங்கும். தாவர கீற்றுகள் இந்த உயிரினங்களுக்கு தங்குமிடத்தையும் வழங்குகின்றன.

சரியான வகை உயிரியல் கட்டுப்பாட்டைத் தேர்ந்தெடுப்பது அனைத்து வகையான உயிரியல் கட்டுப்பாட்டையும் – பெருக்குதல், பாதுகாப்பு அல்லது பாரம்பரியம் – ஏற்றுக் கொள்வது பாதுகாப்பான மற்றும் நிலையான விவசாயத்தை நோக்கிய ஒரு முக்கியமான படியாகும்.

ஒரு விவசாயியாக, உங்கள் கவனம் பெருக்குதல் மற்றும் பாதுகாப்பு உயிரி கட்டுப்பாட்டில் உள்ளது. பெருக்குதல் உயிரி கட்டுப்பாடு பூச்சிகள் மற்றும் நோய்களை எதிர்த்துப் போராடு வதற்கான விரைவான வழியை வழங்குகிறது. அதே நேரத்தில், பாதுகாப்பு உயிரி கட்டுப்பாடு இந்த தேவையற்ற உயிரினங் களின் எதிரிகளைப் பாதுகாக்கும் சூழலை வழங்குகிறது. உங்கள் விவசாய நடைமுறைகளில் ஒருங்கிணைப்பது இரண்டு உத்திகளுக்கும் நன்மை பயக்கும்.

வெற்றிகரமான பூச்சி மேலாண்மைக்கு, விவசாயிகள் சரியான உயிரியல் கட்டுப்பாடு அல்லது உயிரியல் பூச்சிக்கொல்லி தயாரிப்பைத் தேர்ந்தெடுத்து நன்மை பயக்கும் உயிரினங் களுக்கு ஏற்ற சூழலை வழங்க வேண்டும்.

பூச்சிகளை திறம்பட கட்டுப்படுத்த உதவும் வகையில், சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் பயிர்களை நிர்வகிக்க ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM) முறையைப் பயன் படுத்தத் தொடங்கலாம்.

தகவல் : ச.பூர்ணிமா, உதவிப்பேராசிரியர் (பூச்சியியல்துறை,), பயிர் பாதுகாப்புத்துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு. Email : poorny29@gmail.com


## தலைக் கவசம் உயிர்க் கவசம்
## முறையாக தலைக் கவசம் அணிவோம்



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741